ஆவணி 1982

# லக்
# LUCK

மீண்டும் ஜனாதிபதி ஆவாரா?



எண்சோதிட மாதஇதழ்

ரூபா 2-75

ஆசிரியர்
எண் சோதிட நிபுணர்
எஸ். கி. [illegible] ம்பரநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணு சரணம்

# லக்
# LUCK

எண்ணென்ப ஏனை
எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு


இலங்கையில் வெளியாகும் ஒரேயொரு எண்சோதிட மாத இதழ்.

எண் 1 ஆவணி 1982 எழுத்து: 11.



ஆசிரியர்:
எண் சோதிட நிபுணர்
**எஸ். சி. எஸ். சிதம்பரநாதன்**


★

| | | | |
|---|---|---|---|
| ஆண்டுச் சந்தா | — | ரூபா | 33–00 |
| அரையாண்டுச் சந்தா | — | ,, | 16–50 |

## உங்கள் கவனத்திற்கு......

''லக்'' இதழின் பழைய பிரதிகளைப் பெற விரும்புவோர் பிரதிக்கு ரூபா 3/–ப்படி போஸ்ரல் ஓடர் அனுப்பினுல் உடன் அனுப்பிவைக்கப்படும். இவ்வருட பலன் வெளியாகிய மார்கழி, தை, மாசி இதழ்களில் சில பிரதிகளே கைவசமுண்டு.


வெளியீடு:
**அதிர்ஷ்ட நியூமரோலஜி பப்பிளிக்கேஷன்ஸ்**
19, சப்பெல் வீதி,
யாழ்ப்பாணம்


# இதய ராகங்கள்...

அன்பு வாசகர்களே !

சென்ற மாத இதழின் அட்டையில் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் படத்தையும் உட்புறத்தில் அவரது பொன் மொழிகளையும் பிரசுரித்திருந்தோம். பல அன்பர்கள் பகவான் பற்றிய கட்டுரை வெளிவராததைக் கண்டித்துக் கடிதம் எழுதியுள்ளார்கள். வாசகர்களின் விருப்பே எமது விருப்பமும். எனவே இவ்விதழில் பகவான் பற்றிய சுருக்கமான கட்டுரையும் இடம் பெறுகிறது.

சென்ற இதழுடன் ''எண்கலையில் ஆருட சாஸ்திரம்'' என்ற தொடர் கட்டுரை முடிவுற்றது. பலர் அதனைப் புத்தக உருவில் வெளியிடும்படி கேட்டுள்ளார்கள்; முயற்சிப்போம்.

ஜாதக சோதிடத்தோடும், கைரேகை சோதிடத்தோடும் எண்சோதிடத்தை இணைத்து பயன்பெற வைப்பதே எமது நோக்கமாகும். எமது எண்ணம் ஈடேற வாசகர்களின் அன்பும் ஆதரவும் நிறையத் தேவை.

எதிர்வரும் ஐப்பசி இதழ் ''லக்''இன் முதலாண்டு நிறைவு மலராக வெளிவர இருக்கின்றது. அம்மலர் சிறம்போடு பூத்துக் குலுங்க வாசகர்கள், கட்டுரையாளர்கள், விளம்பரதாரர்கள் கைகொடுத்து உதவுவார்களாக.

வணக்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இப்பகுதியில் பெயர் மாற்ற விரும்பும் வாசகர்கள் தங்களின் பிறந்த திகதி, ஆங்கிலத்தில் பெயர், தந்தை–பேரன்–பூட்டன் பெயர்கள், பிரச்சனைகள் ஆகியவற்றைச் சுருக்கமாக எழுதி, இதன் கீழுள்ள விலாசக் கூட்டோடு, ரூபா 20/= க்கு போஸ்ரல் ஓடரும் அனுப்புதல் வேண்டும். கடிதக் கூடும் பணமும் இல்லாத கடிதங்களுக்குப் பதில் கொடுக்கப்படமாட்டாது.

**என். எம். எம். ஹயாத்து**
540, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,
கொழும்பு– 10

தங்களின் மாத இதழான "லக்" மாதந்தோறும் வாங்கி வாசித்து வருகிறேன். எனது வாழ்வில் இதுவரை முன்னேற்றம் இல்லை. எனது பிறந்த திகதி 30-1-1965. எனது பெயரை ஆங்கிலத்தில் வழமையாக MOHAMED HAYATHU என்றே எழுதி வருகிறேன். எனது தந்தையின் பெயர்MALUNGUNAINA MOHAMED. எனது பெயரை அதிஷ்டமாக மாற்றித்தரும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

★ உங்கள் பிறப்பு எண் 3 ஆகவும், கூட்டு எண் 7 ஆகவும் இருப்பதால், பெயர் எண் 9ல் அல்லது 1இல் அமையவேண்டும். எனவே உங்கள் பெயரை மிகவும் அதிஸ்டமாக N. M. M. HAYAATHU என 37 இல் அல்லது N. M. M HAYATHTHU என 45 இல் வைத்துக்கொள்ளுங்கள். நல்ல நம்பிக்கையோடு தினமும் வாயினால் எழுத்தெழுத்தாக உச்சரித்து உச்சரித்து எழுதிப் பயிற்சி செய்து, 1ம் எண்ணுயின் அதிர்ஷ்டக் கல்லான மஞ்சள் புஸ்பராகம் அல்லது மஞ்சள் வைரம் அல்லது கருநீலம் பதித்த மோதிரமும், 9-ம் எண்ணில் பெயர்வைத்தால், சிவப்புக்கல் அல்லது பவளம் அல்லது மாணிக்கம் பதித்த மோதிரமும் அணியுங்கள். அதிர்ஷ்டம் உங்களைத் தேடி வரும். உங்கள் வாழ்வு சிறக்க ஆண்டவனை வேண்டுகிறேன்.

**எஸ். கே. சுப்பையா,**
281, லோவர் றோட்
பதுளை.

நான் தங்களது "லக்" இதழை வாசித்துப் பார்த்தேன். மிகவும் நன்றாக உள்ளது. நான் 22–9–1951ல் பிறந்தேன். நான் முன்பு S. K. MANICKAVASAGAM என்றே அழைக்கப்பட்டு அப்படியே கையொப்பமும் வைத்தேன். பின்னர் பிறப்புச் சாட்சிப் பத்திரத்தில் உள்ள பெயரில் S. K. SUPPIAH எனப் பாவிக்கிறேன். தினமும் 37 முறை கையொப்பம் இட்டுவருகிறேன். முன்னேற்றமே இல்லை. எனது மனைவி பிறந்தது 5–1–1955. மனைவியின் பெயர் புஸ்பராணி நான் வியாபாரம் செய்யலாமா? அதில் முன்னேற்றம் காணுவேனா? எங்களின் வாழ்விற்கு நல்லவழி காட்டுவீர்கள் என நம்புகிறேன்.

★ உங்கள் பிறப்பெண் 4 ஆகவும், கூட்டெண் 5 ஆகவும் இருப்பதால் உங்கள் பெயரை 5ல் வைப்பதுதான் உத்தமம். எனவே உங்கள்பெயரை அதிர்ஷடமாக K. CHUPPAIYAH என 41ல் வைத்துத் தினமும் வாயினால் எழுத்தெழுத்தாக உரக்க உச்சரித்து, உச்சரித்து எழுதிப் பயிற்சி செய்யுங்கள். உங்கள் மனைவியின் பிறப்பெண் 5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவும். கூட்டெண் 8 ஆகவும் இருப்பதால் பெயரை அதிர்ஷ்டமாக S. PUSSPARANI என 41 இல் வைத்து வாயினுல் உரக்க உச்சரித்து எழுதிப் பயிற்சி செய்விக்கவும். இருவரும் அதிர்ஷ்டக் கல்லான வைரம் அல்லது ஷேர்க்கன் பதித்த மோதிரம் அணிந்தால் 5-ம் எண்ணின் பூரண ஆதிக்கத்துக்குள் வந்துவிடலாம். நல்ல நம்பிக்கையுடன் பின்பற்றுங்கள். வெற்றி நிச்சயம். உங்கள் நல்வாழ்வுக்காக சர்வலோக நாயகனுன கண்ணனை வேண்டுகிறேன்.

சி. எஸ். எஸ். முத்துக்குமாரு
121, 1-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

எனது பிறந்ததிகதி 22-1-1938. எனது பெயர் C. S. S. MUTTUCUMARU எனக்குத் தொழிற்சிறப்பும் அதிர்ஷ்டமும் உண்டா? இல்லையெனின் மாற்றம் ஏதாவது செய்யவேண்டுமா?

★ தங்கள் பிறப்பெண் 4. கூட்டெண் 8. ஆனுல் உங்கள் பெயர் எண் 55. அதாவது 1. 55 நல்ல எண்ணுனுலும் உங்களுக்கு 8இன் ஒரே ஒரு வியோசனம் 5 தான். எனவே உங்கள் பெயரை மிகவும் அதிர்ஷ்டமாக C.S.S. MUTHUCCUMARU என 59ல் (தமிழிலும்கூட இதுதான் சரியான உச்சரிப்பு) வைத்து, ஒவ்வொருநாளும் அதிகாலையில் எழுத்தெழுத்தாக இனிசலோடு சேர்த்து வாயினுல் உரக்க உச்சரித்து உச்சரித்து 104 முறையாகுதல் எழுதிப் பயிற்சிசெய்யுங்கள். நல்ல நம்பிக்கையோடு செய்தால் ஒலி அசைவினுல் மந்திர சக்திபோன்று பலன் உண்டு. உங்கள் சாதகத்தில் 10ல் ராகு இருப்பது தொழிலில் மந்த உயர்வு, நிம்மதியின்மை, சிற்சிலசமயத்தில் ஏமாற்றம் முதலியன நிகழும். உங்களுக்கு சனி தெசை சனி புத்தி நடப்பதாலும், தற்பொழுது ஏழரைச்சனி நடப்பதாலும் கட்டாயம் 5 இனுல் தான் ஆறுதல் உண்டு. அத்துடன் 83-2-19க்குப் பின் சனி தெசை புதன் புத்தி ஆரம்பிக்கிறது. வியாழமாற்றமும் இருந்தநிலும் பார்க்க நன்மை செய்யும். மோதிரத்திற்கேற்ற அதிர்ஷ்டக் கல் வைரம் அல்லது ஷேர்க்கன். தாங்கள் சகல சிறப்போடும் வாழ வேண்டுமென எல்லாம்வல்ல கண்ணனைப் பிரார்த்திக்கிறேன்.

கே. ரவீந்திரன்,
மே|பா. சேனு பெரேரா
229|36, சென் யோசெவ் ரேட்
நீர்கொழும்பு.

எனது பிறந்த திகதி 23-8-1947. எனது பெயர் K. RAVEENDRAN தந்தையின் முழுப் பெயர் சீனிவாசகம் கந்தசுவாமி. எனது பெயர் அதிர்ஷ்டமானதா?

★ உங்கள் பிறப்பெண் 5 ஆகவும், கூட்டெண் 7 ஆகவும், பெயர் எண் 38 ஆகவும் இருப்பது துரதிர்ஷ்டமே. எனவே உங்கள் பெயரை பேரனின் பெயர் முதலெழுத்தோடு சேர்த்து மிகவும் அதிர்ஷ்டமாக S. K. RAVEENDRAN என 41 இல் வைத்து தினமும் காலையில் எழுத்தெழுத்தாக உச்சரித்து உச்சரித்து 104 தரமாகுதல் எழுதிப் பயிற்சிசெய்து, அதிர்ஷ்டக் கல்லான வைரம் அல்லது ஷேர்க்கன் பதித்த மோதிரம் அணியுங்கள். நிச்சயம் அதிர்ஷ்டம் உங்கள் வீடு தேடிவரும். உங்களுக்கு சர்வ ஐஸ்வரியங்களும் கிட்டவேண்டுமென லீலாவினேதனுன கண்ணனை வேண்டுகிறேன்.

எஸ் ஜெகநாதன்,
4/105, கந்தசுவாமி கோயில் ரேட்,
திருகோணமலை.

எனது பிறந்த திகதி 15-3-1945. எனது பெயர் சிவக்கொழுந்து ஜெகநாதன். எனது மனைவியின் பிறந்ததிகதி 12-10-1949. பெயர் ஜெயராணி. நான் எனது பெயரை S. JEKANATHAN என எழுதி வருகிறேன் என் மனைவி J. JAYA-RANIEE என எழுதிவருகின்ரு. எங்களைப்பிடித்திருக்கும் துன்பங்கள், துயரங்கள் விலக எப்படி எமது பெயரை எழுதவேண்டும்?

★ உங்கள் பிறப்பெண் 6. கூட்டெண் 1. உங்கள் பெயர் எண் 33. இது மிகவும் பொருத்தமும் அதிர்ஷ்டமும் உடையது. அதிர்ஷ்டமாக அமைந்தாலும் அதன் வலிமையைக் கூட்டாவிட்டால் பலன் செய்யமாட்டாது. எனவே தினமும் அதிகாலையில் முதலெழுத்தோடு சேர்த்து வாயினுல் உரக்க உச்சரித்து, உச்சரித்து 105 முறை எழுதிப் பயிற்சி செய்யுங்கள். உங்கள் மனைவியின் பிறப்பெண் 3 ஆகவும், கூட்டெண் 9 ஆகவும் இருப்பதால் பெயரை 9ல் வைப்பதே உத்தமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனல் இனிசல் J இருப்பதால், இனிசல் கழிக்க பெயர் மட்டும் 8ல் வந்துவிடும். ஆகையால் அவ ரின் பெயரை நட்பு எண்ணுன, 6இல் தான் வைக்கவேண்டும். அவர் பாவிக்கும் பெயர் ஜெயராணி அல்ல, ஜயராணி. எனவே மிக அதிர்ஷ்டமாக J. JEYARAANIE என 24ல் வைத்து உச்சரித்து எழுதிப் பயிற்சிசெய்யவும். இருவரும் மரகதப் பச்சை அல்லது ஜேட் அல்லது இந்திரநீலம் பதித்த மோதிரம் அணிந்தால் துன்பங்கள் யாவும் சூரியனைக்கண்ட பனிபோல் விலகிவிடும். உங்களுக்கு அடுத்த ஆண்டு குழந்தைப் பாக்கியத்திற்கு இடமுண்டு. தங்களுக்கு சாதகப்படி தற்பொழுது ஆகஸ்ட் 19 வரை வெள்ளிதெசை செவ்வாய் புத்தி. அதன் பின்பு 3 வருடத்திற்கு ராகு புத்தி. இந்த வருடத்தில் அட்டமத்து வியாழன் மாற, அட்டமத்துச் சனி தொடங்குகிறது. இந்த மூன்றையும் பார்த்து, நிறுத்தால் உங்களுக்கு மத்திம பலனை செய்யும். உங்கள் மனைவிக்கு அக்டோபர் 29 வரை வியாழ தெசை சனி புத்தி நடக்கிறது. அதன் பின்பு புதன் புத்தி மிக உச்சமான காலம். வியாழ சனி மாற்றமும் நற்பலனையே தருகிறது. புதன் புத்தியில் புத்திர பாக்கியம் கிட்டும். நீங்களிருவரும் சந்தோசத்தோடும், சகல சிறப்போடும் வாழவேண்டுமென ஆபத்தாண்டவனாகிய கண்ணனை வேண்டுகிறேன்.

சி. தங்கராசா,
சந்தை வீதி,
வந்தாறு மூலே,
செங்கலடி.

"லக்" வாசகர்களில் நானும் ஒருவன். நான் பிறந்ததில் இருந்து இதுவரையும் வறுமையையும், துன்பத்தையும்தான் அனுபவித்து வருகிறேன். ஆகவே பெயர் மாற்றத்தின் பின்னுகிலும் நிரந்தர தொழில் கிடைக்கத் தாங்கள் உதவுவீர்கள் என்ற நம்பிக்கையிலேயே எழுதுகிறேன். எனது பிறந்த திகதி 26 – 4 – 1942. பெயர் S. THANGARAJAH. தந்தையின் பெயர் பி. சின்னத்தம்பி. மனைவியின் பிறந்ததிகதி 22-1-47 பெயர் GRACE. தயவுசெய்து பதில்தரவும்.

★ உங்கள் பிறப்பெண் 8 ஆகவும், கூட்டெண் 1 ஆகவும் இருப்பதால் பெயர் 5இல் தான் அமையவேண்டும். 32ல் பெயர் அமைந்திருப்பது நல்லதல்ல. எனவே உங்கள் பெயரை அதிர்ஷ்டமாக P. S. THANGARAAJAH என 41ல் வைக்கவும். உங்கள் மனைவியின் பிறப்பெண் 4 கூட்டெண் 8. எனவே அவரின் பெயரையும் அதிர்ஷ்டமாக GRACE THANGARAASA என 41ல் வைக்கவும். இருவரும் எழுத்தெழுத்தாக வாயினுல் உச்சரித்து, உச்சரித்து ஒவ்வொருநாளும் எழுதிப் பயிற்சிசெய்யவும். அதிர்ஷ்டக்கல்லான வைரம் அல்லது ஷேர்க்கன் பதித்த மோதிரம் அணியவும். அதிர்ஷ்டதேவதை அரவணைப்பது நிச்சயம். ஜெனன சாதகத்தின்படி இந்த ஐப்பசியுடன் ஏழரைச்சனி முடிகிறது. பயம் வேண்டாம். வாழ்வு சிறக்கும். உங்கள் நல்வாழ்விற்காக இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**இம் முகவரியோடு ரூபா 20/= அனுப்பிய கடிதங்களுக்கே பதில் கொடுக்கப்படும்.**

S. C. S. CHITHAMBARANATHAN
EDITOR "LUCK"
19, CHAPEL STREET.
JAFFNA.

## வேண்டுகோள்

உங்கள் அபிமான எண் சோதிட இதழான "லக்" இன் முதலாண்டு மலர் எதிர் வரும் ஐப்பசியில் அதிக பக்கங்களுடன், பல்வேறு கட்டுரைகளுடன், வெளிவர இருக்கின்றது. அம்மலரின் சிறப்பிற்கு கட்டுரையாளர்கள், அறிஞர்கள், வியாபாரிகள், அபிமானிகள் ஆகியோரின் ஒருங்கிணைந்த ஆதரவை வேண்டிநிற்கிறோம். ஆ–ர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதிடம் கற்போம்

— பிரம்மதேவன் —

வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க, சோதிட சாஸ்திரத்தையும் அரிச்சுவடியில் இருந்து ஆனி இதழ் முதல் தொடர் கட்டுரையாகத் தருகின்றோம். சோதிடம் கற்பவர்களுக்கு இப்பகுதி மிகவும் பிரயோசனப்படும். ஆ—ர்.

சென்ற இதழில் கிரகங்களின் வலிமை, கிரக தாரகம், பன்னிரு பாவ பலன்கள், ஸ்தானங்கள் ஆகியவற்றைப் பற்றி அறிந்தோம். இனி ஒவ்வொரு கிரகத்தினதும் பலன்களைத் தனித்தனியே பார்ப்போம்.

**சூரியன்:** நிதான புத்தி, அரசாங்க உத்தியோகம், ஈசுவர வழிபாடு, சத்திய நெறி, வைத்தியத் தொழில், கண்ணச்சூடு போன்ற சரீர உஷ்ணம், பித்த ரோதம், சிவாதார மான சுகங்கள், கீர்த்தி அதிகாரம், ஆத்ம ஞானம், சபைத் தலைமை, பிதாவின் பலன், காடுபடு திரவியம்—சிவப்பு நிறமான பொருட்களின் சேர்க்கை இவைகளை அறியலாம்.

**சந்திரன்:** உடல் அழகு, முகவசீகரம், நிலையில்லாத புத்தி, நற்குணம், வாசனைத் திரவிய விருப்பு, தேச சஞ்சாரம், பயிர்த்தொழில், கடல்படு திரவியம், வெண்மை நிறமான பொருட்களின் சேர்க்கை, பால், தயிர் முதலியவற்றில் விருப்பு, மாதாவின் பலன் இவைகளை விளக்குவது.

**செவ்வாய்:** பூமிப் பலன், சரீரபெலம், உற்சாகம், சகோதர பலன், சத்துரு பலன், திடசித்தம் அகங்காரம், தாரக்குழப்பம், பெண் ஜாதகத்தில் மாங்கல்யம், கழுத்து — காது — கைகளில் நோய், ஆயுத பயம், வெண்சிவப்பு நிறமான பொருட்களின் சேர்க்கை இவைகளை அறியலாம்.

**புதன்:** கணித வல்லமை, கல்வி, விவேகம், ஞான அறிவு, சித்திரம், சிற்பம், வியாபாரம், வாக்கு வல்லமை, வாயுரோகம், நுட்பமான வேலை, பச்சை நிறமான பொருட்களின் சேர்க்கை மாமன்—இனபந்துக்களின் பலன் இவைகளை விளக்குவது.

**வியாழன்:** நம்பிக்கை, அன்பு அறிவு சரீர புஷ்டி, திரவியம், ஞான சாஸ்திர உணர்ச்சி, வீடு—பாற்பசு—பொன்—புடவை, கீர்த்தி, மந்திர உபதேசம், வேதாகம ஆராய்வு, மஞ்சள் நிறமான பொருட்களின் சேர்க்கை, புத்திரனின் பலாபலன் இவைகளை அறியலாம்.

**சுக்கிரன்:** விவாகம், போகசுகம் அலங்காரம் மங்களம், இனிய பேச்சு, ஆடை ஆபரண அலங்காரச் சிறப்பு, ஆண்—பெண் வசியம், வாகனச் சிறப்பு, ஸ்திரி சம்பந்தமான ரோகங்கள், நீல வெண்மை நிறமான பொருட்களின் சேர்க்கை, தாரத்தின் பலாபலன் இவைகளை விளக்குவது.

**சனி:** வேளாண்மை, பசு முதலியவைகளின் விருத்தி, அபகீர்த்தி, ஒழுக்கந் தவறுதல், சோம்பல், காரிய தாமதம், அரச விரோதம், தேச சஞ்சாரம், விபத்து, வேலைக்காரர் பலன், கறுப்பு நிறமான பொருட்களின் சேர்க்கை, ஆயுட் பலன் இவைகளை அறியலாம்.

**இராகு:** தகப்பனுரின் பிதா, சர்ப்பம் முதலிய விஷபயம், மந்திர சாதனை, அந்நிய தேச வாசம், சத்துரு துன்பம், மலைபடு திரவியம், தோல் சம்பந்தமான ரோகங்கள், தொழில் ஊக்கம், பராக்கிரமம், கறுப்புநிறமான பொருட்களின் சேர்க்கை, இவைகளை விளக்குவது

**கேது:** தாயின் பிதா, ஞானசாதனை, வலிப்பு முதலியவை, சித்த சுவாதீனமில்லாத வார்த்தை, சித்திரத் தொழில், பிடிவாதக் குணம், தனித்திருத்தல், கீழ்த்தொழில் செய்ய அஞ்சாமை, அந்நியரால் வரும் பலன், விசித்திர நிறமான பொருட்களின் சேர்க்கை இவைகளை அறியலாம்

இனிமேல் ஒவ்வொரு கிரகங்களினாலும் ஏற்படும் நோய்களைச் சிறிது கவனிப்போம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியன்: நெருப்புக் காய்ச்சல், வைசூரி, பொக்களிப்பான், மூளை—இருதயம்—வயிறு முதலிய இடங்களில் ரோகம், பைத்தியம், முதலிய நோய்கள் ஏற்படும்.

சந்திரன்: வாந்தி, வாதசுரம் நரம்புத் தளர்ச்சி, சலரோகம், பீனிசம், பாண்டுநோய், முகம்—பல்—வாய்—நாசி முதலான இடங்களில் ரோகம் முதலியன ஏற்படும்.

செவ்வாய்: தோள்—கை—கழுத்து—காது முதலிய அங்கங்களில் ரோகம், இரத்தாச நோய், இரத்தக் கொதிப்பு முதலிய நோய்கள் ஏற்படும்.

புதன்: மார்பு—முதுகு ஆகிய அங்கங்களில் பீடை, சுவாசாசய ரோகம், பக்கவாதம், பாரிசவாதம், பலவிதமான வாதரோகங்கள் முதலிய நோய்கள் ஏற்படும்.

வியாழன்: குண்டிக்காய்—மூலம் முதலான இடங்களின் ரோகம், இருதய வியாதி, வயிற்று ரோகம், முதலிய நோய்கள் ஏற்படும்.

சுக்கிரன்: நரம்பு விறைப்பு, ஸ்திரி புருஷ சேர்க்கையினுல் வரும் ரோகங்கள், முதலிய நோய்கள் ஏற்படும்.

சனி: கால்களில் நோய், முடக்கு வாதம் எலும்பு சம்பந்தமான புண், வலிப்பு, மூச்சுத் திணறல், வாதசுரம் முதலிய நோய்கள் ஏற்படும்.

ராகு: தோல் சம்பந்தமான ரோகம், விஷ நீர்ப்பீடை, சொறி—சிரங்கு முதலிய நோய்கள் ஏற்படும்.

கேது: நவீன ரோகம், சரீர பீடை மந்திரப் பிரயோகம், விஷபயம் முதலிய நோய்கள் ஏற்படும்.

(வளரும்)

# அறிவுச்சுடர் 5

வாசகர்களின் அறிவைக் கூர்மைப்படுத்தவும் பல்வேறு வகையான அறிவைப் பெற்றுக்கொள்ளவும் "அறிவுச்சுடர்" உதவும். கிடைக்கப்பெற்ற சரியான விடைகளுள் அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிந்தெடுக்கப்படும் இருவரின் பெயர்கள் இப்பகுதியில் பிரசுரிக்கப்படும்.

கேள்வி.

1 கொழும்புவாசிகளுக்கு நாளாந்தம் தேவைக்கு நன்னீர் வழங்கும் நீர்த்தேக்கம் எது?

2 பச்சையரிசியைவிடப் புளுங்கல் அரிசியில் எந்த விற்றமின் அதிகம் உண்டு?

3 இலங்கையில் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றது எந்த ஆண்டில்?

4 அமெரிக்க ஜனாதிபதி நிக்சன் அமெரிக்காவின் எத்தனையாவது ஜனாதிபதி?

5 உலகின் சகல மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ள நூல் எது?

அறிவுச்சுடர் 4 க்கான சரியான விடைகள்:

1. டி. எஸ். சேனநாயக்கா 2. சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி 3. சகுனி 4. ஜப்பான் 5. பக்கிங்காம் அரண்மனை.

முதலாவது அதிர்ஸ்டசாலி:

திருமதி T. R. ஜீவராணி
39, சென் லோறன்ஸ் றோட்,
வெள்ளவத்தை,
கொழும்பு-6

இரண்டாவது அதிர்ஷ்டசாலி:

செல்வி. கு. சுசிலாதேவி,
34, 4ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

இலங்கையில் மட்டுமல்லாது உலகிலேயே வெளிவரும்
ஒரே ஒரு எண்சோதிட மாத சஞ்சிகை "லக்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாய் தோசமும் விதிவிலக்கும்

— தில்லைக்கூத்தன் —

ஒருவர் சாதகத்தில் ''ல'' என்று கோடிட்டிருக்கும் வீட்டிலிருந்து, அதாவது லக்கினம் முதலாக 2, 4, 7, 8, 12 -ம் இடங்களில் செவ்வாய் ஜனன காலத்தில் நின்றிருந்தால் அதற்கு செவ்வாய் தோசமுள்ள சாதகம் என்று பெயர். ஆண் பெண் இருபாலாருக்கும் இவ்விதமான தோசமிருப்பின் தடையின்றித் திருமணம் செய்யலாம். ஒருவருக்குத் தோசமிருந்து மற்றவருக்குத் தோசமில்லையெனில் செய்யலாகாது. தோசமுள்ள சாதகம் மேலோங்கி தோசமில்லாத சாதகரின் ஆயுளுக்கோ, ஆரோக்கியத்திற்கோ, சுகவாழ்விற்கோ குந்தகமாக நிற்கும். இதைக் கவனிக்காமல் திருமணம் நிகழ்ந்தால் அந்தத்தம் பதிகளின் விதியில் பல சதிகள் ஏற்பட்டு வாழ்க்கையில் வெறுப்பும் விரக்தியும் தோன்றும்.

செவ்வாய் கிரகம் ஒருவரின் குணம், ஆற்றல், ரத்தத்தின் ஓட்டம், சரீரத்தின் உஷ்ணம் மனோதிடம், துணிச்சல், கூர்மையான ஆயுதத்தால் வெட்டப்படுதல், சத்திரசிகிச்சை புண் உண்டாதல், விபத்து ஏற்படுதல், வீடு - பூமியால் சுக துக்கங்களை அனுபவித்தல், சகோதரர்களின் ஒற்றுமை – வேற்றுமை, அதிகாரம் செலுத்துதல், வீரியத்தை இழத்தல், போராடுவதிலே முனைதல் பித்தமான சரீரம், காரசாரமான உணவை உட்கொள்ளுதல், சீற்றங்கொண்டு சீறிவிழுதல், பெண்களுக்கு மாதக்கோளாறுகள் போன்ற இத்தகைய நிகழ்வுகளுக்கு ஆதாரம்.

ஆகையால் ஒருவர் சாதகத்தில் இந்தத் தத்துவங்களில் சில நிறைந்தும், மற்றவர் சாதகத்தில் குறைந்தும் காணப்படின் இருவர் ஐக்கியமும் வன்மையைக் குன்றச்செய்து தீரா நோய்களில் ஆழ்த்தும். நோய் இல்லாவிடில் இருவரும் பிரிந்திருக்கவும், ஒன்றுபட்டிருப்பின் வீண் சச்சரவுகளும் ஏற்படும். இதனால்தான் தம்பதிகள் தீராத நோய்களுக்கு இரையாவதையும், கொடிய விபத்துக்களில் சிக்கி இருவரும் அசம்பாவித நிகழ்ச்சிகளுக்கு உட்படுவதையும், இருவருக்கும் நீண்ட ஆயுள் இருப்பின் விவாகரத்தும், இதற்கு இடமில்லாவிடின் சதா நோய்துன்பமும், கீரியும்-பாம்பும் போன்ற சண்டை சச்சரவையும் அனுபவிப்பதை நாம் கண்கூடாக பார்க்கின்றோம். செவ்வாய் குருதி (இரத்தம்) காரகனாகையால் தம்பதிகள் இருவர் சரீரத்தில் உள்ள ரத்தவேகத்தின் ஒற்றுமைக்கும் அடிப்படையாய் செவ்வாயின் ஆதரவு தேவை. செவ்வாய் தோசத்தின் ரகசியமும் உண்மையான தத்துவமும் இதுதவிர வேறொன்றுமில்லை.

விதிவிலக்கு. (அ) 2ம் இடத்துச் செவ்வாய் மிதுனம் கன்னியில்இருந்தால் தோசமில்லை.

4ம் இடத்துச் செவ்வாய் மேடம் விருட்சிகத்திலிருந்தால் தோசமில்லை.

7ம் இடத்துச் செவ்வாய் மகரம், கற்கடகத்திலிருந்தால் தோசமில்லை

8ம் இடத்துச் செவ்வாய் தனு, மீனத்தில் இருந்தால் தோசமில்லை

12ம் இடத்துச் செவ்வாய் இடபம் துலாமிலிருந்தால் தோசமில்லை.

(ஆ) லக்கினத்தோடு சேர்த்து இந்த ஆறு செவ்வாயும் கும்பத்திலும் சிங்கத்திலும் அமைந்தால் தோசமில்லை.

(இ) செவ்வாய், சந்திரன் அல்லது வியாழனுடன் சேர்ந்தால் தோசமில்லை.

(ஈ) புதன், குரு, வெள்ளி, சந்திரன் கூடினாலும், பார்த்தாலும் தோசமில்லை.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்கவேண்டிய கஷ்ட நிவாரணி "லக்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. ஜே. ஆர் ஜயவர்த்தனாவுக்கு ஜனாதிபதி தேர்தலில் வெற்றி கிட்டுமா?

ஸ்ரீலங்கா குடியரசின் அதிஉத்தம ஜனாதிபதியான மாண்புமிகு ஜே. ஆர். ஜயவர்த்தனா அவர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட வேண்டும் என்பதற்காக ஜனாதிபதி தேர்தலில் குதிக்கிறார். இவருக்குத் தேர்தலில் வெற்றித் தேவதையை அணைக்கும் வாய்ப்பு உண்டா எனப் பார்ப்போம்.

திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா 1906ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணி 25 நிமிடமளவில் கொழும்பில் ஜெனனமானவர். இவரது உதய லக்கினம் கன்னி. நட்சத்திரம் மகம் 4ஆம் பாதம். எனவே இராசி சிங்கம். ஜெனன காலம் கேது மகா தெசையில் கர்ப்பச் செல்பு நீக்கி இருப்பு மாதம் 5. நாள் 23.

| | | | |
|---|---|---|---|
| 7 | 8 | 9 | குரு |
| சனி | கிரக நிலை | | ரா |
| கே | | | செ. சந். பு. |
| 4 | 3 | சுக். | ல. / சூ. |

இவரின் சாதகத்தில் லக்கினத்தில் இருந்த சூரியன் 12ஆம் இடத்ததிபதி. ஆனால் லக்கினாதிபதி புதன் 12ஆம் இடத்தில் இருக்கிறார். எனவே சூரியனும், புதனும் பரிவர்த்தன யோகம் பெற்றனர். மேலும் 2ஆம் வீட்டில் ஆட்சி பெற்ற சுக்கிரனும்; அதிலிருந்து மூன்று வீடு தள்ளி 6ஆம் வீட்டில் ஆட்சிபெற்ற சனியும், அதிலிருந்து மூன்று வீடு தள்ளி 10ஆம் வீட்டில் நட்புப் பெற்ற வியாழனும் இருப்பது மிக நல்ல பலனைக் கொடுக்கும். திரு. ஜயவர்த்தனா பிறந்து 5 மாதம் 23 நாளின் பின் 20 வருடங்கள் சுக்கிர தெசை மிகமிக உச்சமான காலமாகும்.

இவர் ராகு தெசை சனி புத்தி நடந்த வேளை, 1956இல் பதவி இழந்தார். 1970ஆம் ஆண்டு மந்திரி பதவியை இழந்தாலும், வியாழ தெசை சனி புத்தியில் (தெசா நாதனுக்குப் புத்திநாதன் 9இல் இருந்ததால்) எதிர்க்கட்சித் தலைவரானார். 1976-01-22 தொடக்கம் இவருக்கு வியாழ தெசையில் சுக்கிர (வெள்ளி) புத்தி நடந்தது. இக்காலத்தில்தான் 1977ஆம் ஆண்டு பிரதமராயும், பின்னர், 1978-02-4ஆம் திகதி மக்கள் ஜனாதிபதியாயும் ஆனார். தற்பொழுது நடப்பது வியாழ தெசை, ராகு புத்தி. இது 1981-10-16 தொடக்கம், 1984-03-10 வரை நடக்கும். தொழில் ஸ்தானமான 10இல் நின்ற வியாழ தெசையும், லாப ஸ்தானமான 11இல் நின்ற ராகு புத்தியும் நிச்சயம் நற்பலன் செய்யும். அதி உன்னத நிலைக்கு உயர்த்தும். அத்துடன் கோசரப்படி அக்டோபரில் சனி துலா இராசிக்கு மாறுகிறது. தற்பொழுது இவருக்கு ஏழரைக் கடைக் கூறு.

இவரின் பிறப்பெண் 8. கூட்டெண் 6. 8 எண்ணுக்குரிய சனியும், 6 எண்ணுக்குரிய சுக்கிரனும் ஆட்சி பெற்று இருக்கின்றன, மேலும் இவர் பிறந்த காலப்பகுதி ஆகஸ்ட் 21 தொடக்கம், செப்ரெம்பர் 20 — 27 வரையுள்ள புதனின் காலப் பகுதியாகும். எனவே 8இல் பிறந்தாலும் 5இன் விமோசனம் இயற்கையாகவே அமைந்துவிட்டது. அத்துடன் ஜாதகத்தில் 8ஆம் எண்ணின் கிரகமான சனியை 5ஆம் எண்ணின் கிரகமான புதன் பார்க்கிறதால் ஒரு நிவாரணம் உண்டு. சோதிட—எண்சோதிட ரீதியாகப் பார்த்தாலும் திரு. ஜயவர்த்தனாவிற்கு ஜனாதிபதி தேர்தலில் அமோக வெற்றி கிட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா

— துர்க்கா —

பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவை அருட்சக்தி பெற்ற மானிடனாகக் கருதுவோரும் உளர். அவரை அவதார புருசனாக — மனித உருவில் வந்த இறைவனாகக் கொள்வோரும் உளர். ''இது எல்லாம் ஜால வித்தை'' எனக் கூறி அவரை அவமதிப்பாரும் இருக்கின்றனர். யார் யார் எந்தெந்த மனப்பக்குவத்தோடு நோக்குகின்றனரோ அவரவருக்கு அந்தந்த நோக்கில்தான் நிகழ்வுகள் — காட்சிகள் — கோட்பாடுகள் தென்படும். இதனை யாவரும் ஒத்துக்கொள்வர். பல வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க பாபா பற்றிய சில தகவல்களைத் தருகிறோம்.

இந்தியாவிலே ஆந்திராவில் மைசூருக்கு இருநூறு மைல் தொலைவில் உள்ள புட்டபர்த்தி என்ற கிராமத்திலே பெத்த வெங்கப்பராஜு — ஈஸ்வரி அம்மாள் தம்பதிகள் மிக்க தெய்வ பக்தி கொண்டவர்கள். இவர்களுக்கு ஆண் குழந்தை ஒன்றும், பெண் குழந்தைகள் இரண்டும் ஆண்டவன் அருளால் கிடைத்தன. அவர்கள் முறையே சேஷமராஜு, வெங்கம்மா, பர்வதம்மா என்பவர்கள். ஆண்டுள் கழிந்தன. ஈஸ்வரி அம்மா தமக்கு இன்னும் ஓர் ஆண் மகவு வேண்டுமென்று, புட்டபர்த்தி கிராமத்திலுள்ள தெய்வங்களை எல்லாம் வேண்டிக் கொண்டார். அத்தோடு சத்திய நாராயண பூசையும் செய்து வந்தார். இறையருளால் ஈஸ்வரிரியம்மாவின் கருவில் உருப்பெற்றது. அவரின் வேண்டுகோள் பலித்துவிட்டது, மாதமாக ஆக, அருமைப் புதல்வன் சீக்கிரம் பிறக்க இருக்கிறான் என்பதை அறிவிப்பது போல நள்ளிரவில் தம்புரா தானே இயங்கியும், மத்தளம் முழங்கியும் அவ்வீட்டாரை விழிப்படையச் செய்தன.

1926-ம் ஆண்டு நவம்பர் மாதம் 23-ம் திகதி அருணன் உதிக்கும் நேரம். அக்கிராம மக்களோ புனிதமான அக்கார்த்திகைச் சோமவாரத்தன்று, சிவனை நினைந்து சிவ வழிபாட்டிலே ஈடுபட்டிருந்தனர். அப்பொழுது ஈஸ்வரியம்மா சத்திய நாராயண பூசையின் இறுதிக் கட்டத்தில் இருக்கிறார். பிரசவ வேதனை ஆரம்பித்தது. பூசையை முடித்த பின்னர் புதல்வன் பிறந்தான். இம்மகவைத் துணி மீது கிடத்திய போது ஏதோ அடியிலிருந்து கொண்டு அப்படுக்கையை மேலும் கீழும் விசித்திரமாக நகர்த்தியது. பிரசவம் பார்க்க வந்த பெண்களது கவனம் அங்கே நிலைத்தது. அதை அவர்கள் உற்றுக் கவனித்தபின் படுக்கையைச் சோதித்தனர். படுக்கைக்கடியே நாகம் ஒன்று மண்டலமிட்டுப் படுத்திருந்தது. அனந்த சயனனுக்கு ஆதிசேஷன்! சத்திய நாராயண பூசைக்கும், அப்பூசையால் ஏற்பட்ட பலனுக்கும் உள்ள தொடர்பை எண்ணியே அக்குழந்தைக்கு சத்ய நாராயண என்ற பெயர் வைத்தார்கள்.

சத்யாவின் பள்ளிப்பருவ வாழ்க்கையிலே பற்பல அற்புதங்களைச் செய்தார். அவை யாவும் சகமாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பாடம் புகட்டுவதாய் இருந்தன. 1940 மார்ச் 8-ம் நாள் ஒரு பெரிய கருந்தேள். சத்யாவைக் கொட்டி விட்டதாகக் கூறப்பட்டது. சத்யா மூர்ச்சையுற்று உடல் விறைத்துப் போய் பலமணி நேரம் கிடந்தார். இரண்டொரு நாளில் சத்யா படுக்கையை விட்டெழுந்தார். ஆனால் அவரது நடத்தைகள் அசாதாரணமாகக் காணப்பட்டன. கடவுளைப் பற்றிப் பாடினார்; பேசினார், ஒருவரும் இதற்குமுன் யாத்திரை செய்யாத க்ஷேத்திரங்களின் பெயர்களைக் குறிப்பிட்டார். அவர் சில நேரம் கட்டைபோல் விறைத்துப் போவதும், பின்னர் நடமாடுவதும் யாருக்குமே எட்டாத புதிராகவே இருந்தது. 1940 மே 23-ந் திகதி சத்யா வழக்கம் போல படுக்கையை விட்டு எழுந்ததும் வீட்டிலுள்ளவர்களை தம் அருகே அழைத்து தம் தெய்வீக சக்தியால் கற்கண்டும், மலர்களும் உண்டு பண்ணி வரவழைத்து அவர்களுக்குக் கொடுத்தார். இதனைக் கண்டு யாவரும் வியந்தனர். 1940 அக்டோபர் 20-இல் உலகில் தான்தான் சத்யசாயி பாபா என வெளிக்காட்டி ''நான் போகிறேன் மாயை அகன்று விட்டது. எனக்கு வேலை காத்திருக்கிறது'' எனக்கூறி, மக்களுக்கு உபதேசம் செய்தார்; அற்புதங்கள் எண்ணில் அடங்கா.

பாபாவின் தபோவனமான பிரசாந்தி நிலையம் 1950 நவம்பர் 23-ந் திகதி, அவரது 25-வது பிறந்த தினத்தன்று திறந்து வைக்கப் பட்டது. பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் அற்புதங்களை எடுத்துக்கூற எத்தனையோ பக்கங்கள் தேவைப்படும். அவரது அற்புதங்களும் தெய்வ அருளும் இன்று உலகெங்கணும் பரவியிருப்பதால் அதனை விரிவாகக் கூறவேண்டிய அவசியமும் இல்லை. சத்ய சாயி பாபா மனுக்குலத்திற்கு செய்யும் தொண்டு அளப்பரியது. ஹரிஜனங்களுக்கு வீடுகள் ஆயிரக்கணக்கில் கட்டி அன்பளிப்பு செய்கிறார். குருகுல கல்விக்காக கல்வி நிறுவனத்தை நிறுவி நடாத்துகிறார். ஸ்ரீமதி

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிர்ஷ்ட வழிகாட்டி

(சென்ற மாதத்து 5-ம் எண்ணின் தொடர்ச்சி......)

77. இவ்வெண் தன்நம்பிக்கையையும், சுய உழைப்பையும் குறிக்கின்றது வசீகர வாழ்வு, புகழும், ஜனவசியமும் உண்டாகும். தெய்வ பக்தியும் பூரண பலனைக் கொடுக்கும்.

86. படிப்படியாக இவர்கள் எடுத்த காரியமும், எண்ணிய எண்ணமும் ஈடேறும். இந்த எண்ணுல்தோல்விகண்டவரும் திரும்பி வெற்றி பெறுவார். பிறர் ஆதரவால் சுகவாழ்வும், சந்தோஷமும் கிட்டும். ஆனல், மந்தகதியிலேயே காரியங்கள் நடக்கும்.

95. இவர்கள் தீர்க்கதரிசியாக, பிரசங்கியாக மிளிர்வர். செல்வம், மூதாதையர் சொத்து, செல்வாக்கு, வாக்கு சாதுரியம் நிரம்பப் பெற்றவர்கள் பலவித நூதன சாமான்கள் வியாபாரம் செய்வர். கடவுளுக்குப் பயந்தவர்களும் இவர்களே.

104. இந்த எண்காரரின் ஆரம்பம் கம்பீரமாககவும், முடிவு தடுமாற்றமானதாகவும் காணப்படும். அரிய பெரிய காரியங்களைச் சாதித்தாலும் புகழ் ஒன்றுதான் மிஞ்சும்.

அதிர்ஷ்ட திகதிகள் : 5, 14, 23, 9, 18, 27. (8 தவிர்ந்த எல்லா எண்களுக்கும் பொருந்தக்கூடியவையே).

துரதிர்ஷ்ட திகதிகள்: 8, 17, 26.

அதிர்ஷ்ட நிறம் சாம்பல் நிறம், மஞ்சள். லேசான எல்லாநிறங்களும்.

துரதிர்ஷ்ட நிறம் : கறுப்பு.

மோதிரத்திற்கேற்ற அதிர்ஷ்டக் கல் :

வைரம் (Diamond)
ஸேர்க்கன் (Zircon)

## எண் 6 (சுக்கிரன்)

ஒவ்வொரு ஆங்கில மாதத்திலும் 6, 15, 24 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களும், பெயர் எண், 15, 24, 33, 42, 51, 60, 69, 78, 87, 96, 105 ஆகிய எண்களில் உள்ளவர்களும் 6 எண்ணுகிய சுக்கிரன் கிரக ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்கள். அதிலும் ஏப்ரல் 20 முதல் மே 20—27க்கும், செப்ரெம்பர் 21 முதல் அக்டோபர் 20 — 27க்கும், இடைப்பட்ட காலப்பகுதியில், 6, 15, 24 ஆகிய திகதிகளில் பிறந்து, 6ஆம் எண்ணில் பெயர் அமைந்தவர்களே இந்த எண்ணின் முழு ஆதிக்கத்திற்கும் கட்டுப்பட்டவர்கள்.

இவர்கள் அழகும், என்றும் இளமையான தோற்றமும் உடையவர்கள். கலகலவென்று கதைக்கும் இவர்கள் குடும்பவாழ்க்கையில் மிகவும் பற்றுள்ளவர்கள். இவர்கள் மற்றவரை வசப்படுத்தக்கூடியவர்கள். தங்களது திட்டங்களை நிறைவேற்றுவதில் இவர்கள் மிகவும் உறுதிவாய்ந்தவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு எல்வழியிலும் பணம்வந்துகொண்டே இருக்கும். அழகான பொருள்களை விரும்புகிறார்கள்; அழகான வீடுகளை அமைக்கிறார்கள்; பகட்டான நிறங்களை விரும்புகிறார்கள்: வர்ண ஓவியங்கள், சிலைகள், இசையின்பம் இவர்களுக்கு மிக விருப்பமானவை.

இவர்கள் விடாமுயற்சியும், தன்காரியத்தில் கண்ணும் இருப்பர். நகை அணிவதை மிகவும் விரும்புவர். ஊண், உடை, உறைவிடத்திற்கு என்றும் குறைவில்லை. ஒரு சிலர் தெய்வபக்தியினால் அற்புதங்களைக்கூடச் செய்வர். சிறிய உத்தியோகத்தில் இருந்தாலும் பெரிய அதிகாரியாக முன்னேறுவர்.

இவர்கள் செல்வர்களாயிருந்தால், கலைக்கும், கலைஞர்களுக்கும் வாரிவாரி வழங்குவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களது வீட்டில் என்றும் விருந்தும் கொண்டாட்டமுமாகவே இருக்கும். கோபம் வந்தால் எதிர்ப்பைப் பொறுத்துக்கொள்ளமாட்டார்கள். தங்களுக்கு மரணம் கிட்டினும், தன்னைச் சார்ந்தவர்களுக்காகப் போராடுவர். ஆண்களுக்குத் திருமணத்தின்பின் அதி உன்னத உயர்ச்சிக்கு இடம் உண்டு.

இந்த எண்காரர்களே உலகில் மிக நாகரிக மானவர்களென்று கூறப்படுபவர்கள். இவர்கள் எப்போதும் வாசனைத்தைலம் ( Perfumes ) பூசுவார்கள். இவர்களின் நடையுடை பாவனையில் இவர்கள் 6 எண்காரர் என்று எவரும் எளிதில் கூறிவிடலாம்.

இவர்கள் கலைத்தொழிலிலும், அரசியலிலும் முன்னேறுவர். வணிகம், அரசாங்க உத்தியோகம், ஆசிரியத்தொழில், டாக்டர், என்ஜினியர், காசாளர், நகைவியாபாரம் முதலியவற்றில் முன்னேறுவர். கவிதை, கதை, கட்டுரை, நாடகம், சினிமா முதலியவற்றிலும் ஈடுபாடுடையவர்கள். வெண்கலபபாத்திர வியாபாரத்தில் பொருளீட்டுவர்.

இவர்களுக்குப் 15ஆவது, 24ஆவது, 33ஆவது, 42ஆவது, 51ஆவது, 60ஆவது வயதுகளில் முக்கிய மாறுதல்கள் நிகழும்.

இவர்களுக்கு அடிக்கடி மலச்சிக்கல், உடல் வலி, அசதி, வயிற்று உபாதை, மூலவியாதி ஜநேந்திரிய சம்பந்தமான நோய்கள் வரலாம். இவர்கள் சுத்தமான காற்றைச் சுவாசித்து, தயிர், இளநீர் போன்றவற்றை உட்கொண்டு வந்தால் நோய்வாய்ப்படாது பாதுகாக்கலாம்.

இவர்களுடைய அதிர்ஷ்டக் கிழமைகள் வெள்ளி, செவ்வாய், சிறப்பாக இவர்களது சொந்த எண்களாகிய 6, 15, 24 திகதிகளில் ஏதாவது ஒன்று இந்தக் கிழமைகளில் வருமானால் மிகவும் அதிர்ஷ்டமானது. (வளரும்)

---

**பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபா**

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

ஈஸ்வரம்மா உயர்நிலைப்பள்ளி, ஆனந்தப்பூர் கல்லூரி, போபால் கல்லூரி, ஜெய்ப்பூர்கல்லூரி ஆகிய கலை, விஞ்ஞானக்கல்வி நிறுவனங்களை கோடிக் கணக்கான ரூபாய் செலவில் கட்டி அறிவுப் பசியைப் போக்குகிறார்.

பாபா கூறுகிறார், "முந்தைய பரம்பரையினரைக் காட்டிலும் நீங்கள் அதிர்ஷ்டசாலிகள். ஏனெனில் உங்கள் நடத்தையைக் கவனித்து, வழி காட்டுவதற்கு என்னைக் கொண்டிருக்கிறீர்கள். இவ்வரிய வாய்ப்பைச் சீரியமுறையில் பயன்படுத்திக் கொள்ளுங்கள்."

"நம்பிக்கை கொள்வதே நம்பிக்கையின் பரிசு. அது உண்மையைக் காட்டும். நீவிர் கண்ணபிரானைக் கேவலம் இடை மகனாகக் கருதுவீராயின், நீவிர் கண்ணபிரானைத் தாழ்த்துவதோடல்லாமல் உங்களை அந்நிலைக்குத் தாழ்த்திக் கொள்ளாதீர்கள். உங்கள் நெஞ்சமாகிய கோவிலில் வதியும் இறைவனாக அவனைக் கருதினால் அவன் உங்களது வாழ்க்கைத்தேரைச் செலுத்தும் தேர் வல்லவன் ஆகிறான்."

ஓம் தத் ஸத்.

---


## முக்கிய அறிவித்தல்

உங்கள் பெயரை தனிப்பட்ட முறையில்—பிரத்தியேகமாக மாற்றி அதிர்ஷ்டமாக வாழ விரும்புகிறீர்களா?

ஒரு பெயர் மாற்றத்திற்கு — ரூபா 41/=
கடைக்குப் பெயர் வைக்க — ரூபா 104/=

கட்டணத்தை போஸ்ரல் ஓடர் அல்லது மணி ஓடர் (Post Office: JAFFNA COURTS) அனுப்பி வைத்தால், பதிவுத் தபாலில் முழு விபர மடங்கிய பதில் அனுப்பிவைக்கப்படும். ஜாதகக் குறிப்பு (இருந்தால் மட்டும), பிறந்த திகதி, ஆங்கிலத்தில் பெயர், தந்தை—பேரன்—பூட்டன் பெயர்கள் ஆகியவற்றுடன், உங்கள் பிரச்சினைகளையும் எழுதி அனுப்புங்கள்.

நேர்முகச் சந்திப்பிற்கு கடிதமூலம் திகதியை நிர்ணயிக்கவும்.

எண்சோதிட நிபுணர் **எஸ் சி. எஸ். சிதம்பரநாதன்**
19, சப்பெல் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மாத பலன்

— வசிட்ட முனி —

**17-8-82 முதல் 16-9-82 வரை**

(இது பொதுவான பலன். சிலருக்கு கூட்டெண் பலம் வாய்ந்ததாயின் அதுவே பலன்செய்யும்)

## 1

( 1, 10, 19, 28இல் பிறந்தவர்கள் 1ஆம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள் )

1ஆம் எண்காரரர்களுக்கு இம் மாதம் மிக மிக அனுகூலமான காலமாகும். தொட்டதெல்லாம் பொன் என்ற மாதிரி நிகழ்வுகள் அமையும். குடும்பச் சிறப்பு, நண்பர் உதவி, ஆடை—ஆபரண—பொருள் சேர்க்கை, புதிய வீடு அமத்தல், வழக்கில் வெற்றி ஆகியன இடம் பெறும். உத்தியோகத்தர்களுக்கு யாவரின் ஒத்துழைப்பும், காரியாலயத்தில் உயர்வும் மேலதிகாரியின் பாரட்டும் கிட்டும், வியாபாரிகளுக்கு ஆதாயமேயன்றி நட்டம் என்ற சொல்லுக்கே இடமில்லை. வியாபார விஸ்தரிப்புக்கு மிக உகந்த காலம். பெண்களுக்கு இல்லச் சிறப்பும் நினைத்தவை கைகூடலும், கன்னியருக்குக் காதலில் வெற்றி, திருமணம் வலியவந்து சேரும். மாணவர்களுக்கு கல்வியில் உற்காகம், சுறுசுறுப்பு, பரீட்சையில் வெற்றி கிட்டும். கலைஞர்களுக்கு நற்பெயரும், புகழும் உயரும் காலம். விவசாயிகளுக்கு எதிர்பாராத வருமானமும், அரச ஆதரவும் உண்டு.

அதிர்ஷ்ட திகதிகள் :

ஆக.: 18, 19, 21, 24, 27, 28, 30.

செப்.: 2, 5, 8, 9, 11, 14.

சமபலன் திகதிகள் :

ஆக.: 17, 22, 26, 31.

செப்.: 3, 7, 12, 16,

துரதிர்ஷ்ட திகதிகள் :

ஆக.: 20, 23, 25, 29.

செப்.: 1, 4, 6, 10, 13; 15.

## 2

( 2, 11, 20, 29இல் பிறந்தவர்கள் 2ஆம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்,)

இம்மாதம் இரண்டாம் எண் காரரர்களுக்கும் சிறந்ததே. இதுவரை தடைப்பட்டிருந்த விஷயம் தானுக வெற்றிபெறும். புதிய பூமி சேர்க்கை, பண வருவாய், திடீர் அதிர்ஷ்டம், தெய்வ வழிபாடு, இனத்தவர் உதவி என்பன நடக்கும். உத்தியோகஸ்தர்களுக்கு காரியாலயத்தில் சுமுகமான நிலையும், எதிர்ப்பாலாரின் ஒத்தாசையும், பதவி உயர்வும் கிடைக்கும். வியாபாரிகளுக்கு பெருலாபம் கிடைக்கும், வலிய வந்து பலரும் உதவுவர். புதிய ஸ்தாபனங்களையும் திறக்சலாம். பெண்களுக்கு சாதகமான நேரம். குடும்ப உறவு ஸ்திரமாயும், புத்திர நன்மையும் உண்டு. கன்னிகளுக்கு மங்கள காரியமும் நடந்தேறும். மாணவர்களுக்கு ஆசிரியரின் பாராட்டும், பரீட்சையில் சித்தி, நீண்ட பிரயாணம் என்பனவும் கிட்ட வாய்ப்புண்டு கலைஞர்களுக்கு இது வரை சாதிக்க முடியாதவற்றைச் சாதிக்கும் காலம். விவசாயிகளுக்கு பயிர் கைகொடுக்கும். மாடு, கன்று முதலியவற்ருல் லாபமும் உண்டு.

அதிர்ஷ்ட திகதிகள் :

ஆக.: 18, 19, 21, 24, 27, 28, 30.

செப்.: 2, 5, 8, 9, 11, 14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமபலன் திகதிகள் :

ஆக.: 17, 22, 26, 31.

செப்.: 3, 7, 12, 16.

துரதிர்ஷ்ட திகதிகள் :

ஆக.: 20, 23, 25, 29.

செப்.: 1, 4, 6, 10, 13, 15.

## 3

(3, 12. 21, 30இல் பிறந்தவர்கள் 3ஆம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்.

3ஆம் எண்காரர்களுக்கு இம்மாதம் மிகவும் துரதிர்ஷ்டமானது. நினைத்தவை ஒன்று, நடப்பவை வேறொன்ருகவே இருக்கும். மன அமைதி குன்றும். கடன் தொல்லே, வழக்கில் தோல்வி, வீணுன கெட்டபெயர் வாங்கல், அயலாருடன் சச்சரவு ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரியின் சீற்றம், சகஊழியரின் ஒத்துழையாமை, தண்டனே என்பன இடம்பெறும். வியாபாரிகளுக்கு கடையை இழுத்துப் பூட்டவேண்டிய காலம், கொடுத்த கடன் வசூலிக்க முடியாமை, பணியாட்களின் பழிவாங்கல் நடக்க வாய்ப்புண்டு. பெண்களுக்கு மிகக் கஷ்டமான மாதம் ஒவ்வொரு கருமத்திலும் மற்றவர் பிழைகண்டு பிடிப்பர். கன்னிப் பெண்களுக்கு ஏமாற்றம், முடியஇருந்த திருமணம் தடைப்படுதல் உண்டாம். மாணவர்களுக்கு அவமரியாதை, கல்வி வேப்பங்காயாகும். கெட்டகாலம். பிரயாணங்கள் ஜாக்கிரதை. கலேஞர்களுக்கு செய்யாத குற்றத்திற்குத் தண்டனே அனுபவிக்கநேரிடும். விவசாயிகள் மற்றவர்களிடம் கையேந்தும் பலன்.

அதிர்ஷ்ட திகதிகள் :

ஆக.: 17, 20, 23, 26, 29.

செப்.: 1, 4, 7, 10, 13, 16.

சமபலன் திகதிகள் :

ஆக.: 22, 25, 31.

செப்.: 3, 6, 12, 15.

துரதிர்ஷ்ட திகதிகள் :

ஆக.: 18, 19, 21, 24, 27, 28, 30.

செப்.: 2, 5, 8, 9, 11, 14.

## 4

(4, 13, 22, 31இல் பிறந்தவர்கள், 4ஆம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்.)

4ஆம் எண்காரருக்கும் இம்மாதம் அதிர்ஷ்டமானதே. கடிதமூலம் ஒரு நன்மை காத்திருக்கிறது. சகோதர உதவி. திடீர் அதிர்ஸ்டம், புதிய பொருள் சேர்க்கை, திரும்பிவராதென்றிருந்த கடன் திரும்பிவருதல் நடக்க வாய்ப்புண்டு. உத்தியோகத்தர்களுக்கு அலுவலகத்தில் குதூகலமும், பதவி உயர்வும், யாவரின் பாராட்டும் கிட்டும். வியாபாரிகளுக்கு தனலாபம், வியாபார விஸ்தரிப்புக்கு இடமுண்டு. பெண்களுக்கு ஆடை ஆபரண சேர்க்கை, அயராலால் உதவி, கன்னிப் பெண்களுக்குத் திருமணப் பேச்சு, எதிர்பாலாரின் அன்பு கிடைக்கும். மாணவர்களுக்குக் கல்வியில் ஊக்கம், பிரயாணத்தில் அதிர்ஷ்டம்உண்டு. கலேஞர்களுக்கு இதுவரை இருந்துவந்த தடைகள் நீங்கி பேரும், புகழும் கிட்டும். விவசாயிகளுங்கு நல்ல வருமானமும், வீட்டில் மங்களகரமான நிகழ்ச்சிக்கும் இடமுண்டு.

அதிர்ஷ்ட திகதிகள்:

ஆக.: 18, 19, 21, 24, 27, 28, 30.

செப்.: 2, 5, 8, 9, 11, 14.

சமபலன் திகதிகள்:

ஆக.: 17, 22, 26, 31.

செப்.: 3, 7, 12, 16.

துரதிர்ஷ்ட திகதிகள் :

ஆக.: 20, 23, 25, 29.

செப்.: 1, 4, 6, 10, 13, 15.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5

(5, 14, 23இல் பிறந்தவர்கள், 5ஆம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்.)

5ஆம் எண்காரருக்கு ஆவணிமாதம் மத்திமமான காலமாகும். எவ் விடயத்திலும் மெல்ல மெல்ல வெற்றி கிடைக்கும். செல்வ விருத்தி, புதிய வாகனச் சிறப்பு, நண்பர்களினால் வேதனை, குடும்ப சுகம் உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு, மேலதிகாரியின் நன்மதிப்பைப் பெற்றாலும், எதிர்பாலாரினால், அவமானமும் ஏற்படும். வியாபாரிகளுக்கு வியாபார விருத்தியும், நண்பர்கள் உதவியும், வேலையாட்களின் கஷ்டமும் உண்டு. பெண்களுக்கு இல்லச் சிறப்பும் சிற்சில நேரம் மன அமைதியின்மையும் ஏற்படும். கன்னிப் பெண்களுக்கு திருமணத்திற்கான அறிகுறி தென்படும். மாணவர்களுக்கு பரீட்சையில் சித்தி, பிரயாணக் கஷ்டம், வீண் செலவு ஏற்படும். கலைஞர்களுக்கு ஆக்கங்கள் வரவேற்பைப் பெறும். விவசாயிகளுக்கு வாகன நட்டம் இருந்தாலும் வருவாய் உயரும்.

அதிர்ஷ்ட திகதிகள் :

ஆக.: 17, 22, 23, 26, 31.
செப்.: 3, 4, 7, 12, 13, 16.

சமபலன் திகதிகள் :

ஆக.: 18, 20, 25, 27, 29.
செப்.: 1, 6, 8, 10, 15.

துரதிர்ஷ்ட திகதிகள் :

ஆக.: 19, 21, 24, 28, 30.
செப்.: 2, 5, 9, 11, 14

## 6

(6, 15, 24இல் பிறந்தவர்கள் 6ஆம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்).

இம் மாதம் 6ஆம் எண்காரர்களுக்கு துரதிர்ஷ்டமான காலமாகும். மனச்சஞ்சலம், எதிலுமே ஏமாற்றம். ஒருசிலருக்கு குடும்பப்பிரச்சினை, எதிர்பாலாரினால் வீண் வம்பில் மாட்டிக்கொள்ளல், பண நெருக்கடி, வழக்கில் தோல்விஎன்பன நிகழும். உத்தியோகத்தர்களுக்கு வேலைத்தலத்தில் வஞ்சனை, தண்டனை, மனவிரக்தி என்பன உண்டாம். வியாபாரிகளுக்கு நட்டத்தைத் தாங்கிக் கொள்ளவேண்டிய காலம். கடன் தொல்லை, வேலையாள் வஞ்சனை ஏற்படும். பெண்களுக்கு, நிம்மதி இழந்து அவப்பெயர் கேட்க வாய்ப்புண்டு. கன்னிப் பெண்கள் ஏமாற்றத்தினால் மனச்சஞ்சலம் அடைவர். மாணவர்களுக்குக் கவலையீனம், கல்வியில் நாட்டமின்மை என்பன நிகழும். கலைஞர்களுக்கு தன்னிலும் குறைந்த தரமுடையவர்கள் உயர்வதைக் காணவேண்டிய பரிதாபநிலை. விவசாயிகளுக்கு பெரும்திண்டாட்டமானகாலம். வீண் சண்டையில் மாட்டாது இருக்கவும்.

அதிர்ஷ்ட திகதிகள் :

ஆக : 17, 22, 23, 26, 31.
செப்.: 3, 4, 7, 12, 13, 16.

சமபலன் திகதிகள் :

ஆக.: 18, 20, 25, 27, 29.
செப்.: 1, 6, 8, 10, 15.

துரதிர்ஷ்ட திகதிகள் :

அக்.: 19, 21, 24, 28, 30.
செப்.: 2, 5, 9, 11, 14.

## 7

(7, 16, 25இல் பிறந்தவர்கள் 7ஆம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்.)

7ஆம் எண் காரர்களுக்கு இலாபகரமான காலம். உங்கள் அபிலாசைகள் நிறைவேறும். யார் உங்களை வெறுத்தார்களோ அவர்கள் உங்களைத் தேடிவருவர். பூமி லாபம், ஆபரண சேர்க்கை, பணவரவு, சகோதர நன்மை என்பன உண்டாம். உத்தியோகத்தர்களுக்கு வேலைக்கு மதிப்பும்—சன்மானமும் உண்டு. அலுவலகத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரதும் பாராட்டைப் பெறுவீர்கள், வியாபாரிகளுக்கு தொழில் பலிதம், வியாபார பெருக்கம், பழைய கடன் வசூல் ஆகியன நிகழும். பெண்களுக்கு இல்லச்சிறப்பு, குடும்பசுகம் உண்டாம். கன்னியருக்கு காதலில் ஜெயம், திருமண மகிழ்வு உண்டு. மாணவர்களுக்கு கல்வி மேன்மை, நண்பர் உதவி, பரீட்சையில் சித்தி ஏற்படும். கலைஞர்களுக்கு மதிப்பும், மரியாதையும் உயரும், ஆக்கங்களுக்கு அதிக வரவேற்புக் கிட்டும். விவசாயிகளுக்கு பூமிப்பலன், வாகனச் சிறப்பு, பொருள் வரவு உண்டாம்.

அதிர்ஷ்ட திகதிகள் :

ஆக : 18. 19, 21, 24, 27, 28, 30,
செப் : 2, 5, 8, 9, 11, 14.

சமபலன் திகதிகள் :

ஆக.: 17, 22, 26, 31.
செப்.: 3, 7, 12, 16.

துரதிர்ஷ்ட திகதிகள் :

ஆக.: 20, 23. 25, 29.
செப்.: 1, 4' 6, 10, 13., 15.

## 8

(8, 17, 26இல் பிறந்தவர்கள் 8ஆம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்).

இம்மாதம் உங்களுக்குத் துரதிர்ஷ்டமானதே. சதா சிந்தனையும், வீண் செலவும், வீட்டுக் கஷ்டமும், இரும்பு போன்றவற்றால் அபாயம், வழக்கில் தண்டனை, செய்யாத குற்றத்திற்காக குற்றவாளியாதல், சாண் ஏற முழம் சறுக்கினது போல் இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகத்தில் அபாயம் காத்திருக்கிறது ஊழியர் வலியச் சண்டைக்கிழுப்பர். எச்சரிக்கைக் கடிதம் கூடக் கிடைக்கலாம். வியாபாரிகளுக்கு படு நட்டமும், கொடுத்த கடனைத் திருப்பிப்பெற முடியாது திண்டாட்டமும் உண்டாம். அமைதியாகக் காலத்தைக் கழிக்கவும். பெண்களுக்குக் குடும்பத் தகராறு, புத்திர சுகக்குறைவு, காலில் நோய்வந்து மாறும். கன்னிப் பெண்களுக்கு முற்றான திருமணமே குழம்பிவிடும். பொறுமையைக் கடைப் பிடிக்கவும், மாணவர்களுக்கு மிகவும் கஷ்டமானகாலம். படிப்பில் ஆர்வமின்மை, சோம்பல் உண்டாகும். கலைஞர்களுக்கு நல்ல வாய்ப்பில்லை. துணிந்து இறங்க மனம் ஏவாது. விவசாயிகளுக்கு சோதனைக்குரியகாலம் வேதனை மிகுந்திடும்.

அதிர்ஷ்ட திகதிகள் :

ஆக.: 17, 20, 23, 26. 29.
செப்.: 1 4. 7, 10, 13, 16.

சமபலன் திகதிகள் :

ஆக.; 22, 25, 31.
செப்.: 3, 6, 12, 15.

துரதிர்ஷ்ட திகதிகள் :

ஆக.: 18, 19. 21, 24: 27: 28 ,30,
செப்.. 2, 5, 8, 9. 11. 14.

## 9

(9, 18, 27இல் பிறந்தவர்கள், 9ஆம் எண்ணில் பெயர் அமைந்தவர்கள்.

இம்மாதம் 9ஆம் எண் காரர்களுக்கு சம பலன் கொடுக்கும் காலமாகும். பொருள் வரவும், மிதமிஞ்சிய செலவும், நண்பர்களின் உறவும் உறவினர்களது பிரிவும், குடும்பச் சண்டையும் இல்லத்தில் மங்கள நிகழ்ச்சியும் உண்டாம். உத்தியோகத்தர்களுக்கு ஊழியரிடையே செல்வாக்கு இருந்தும், மேலதிகாரியின் சீற்றத்திற்கு ஆளாக நேரிடும். ஒருசிலருக்கு தண்டனை இடமாற்றமும் கிடைக்கும், வியாபாரிகளுக்கு பணவருவாயோடு கீழ் வேலையாளின் வஞ்சனையும், மனஸ்தாபமும் ஏற்படும். பெண்களுக்கு, கட்டுக்கடங்காச் செலவும், அயலாரின் உபத்திரவமும் இருந்தாலும் திடீர் அதிர்ஷ்டத்திற்கும் இடமுண்டு. கன்னிப் பெண்களுக்கு ஏமாற்றமும் — விரக்தியும் ஏற்பட்டாலும் திருமணம் ஈடேறும். மாணவர்களுக்கு பிரயாசமும் ஊக்கமும் இருந்தாலும் திறமைச் சித்தியும் நற்பெயரும் கிட்டாது. கலைஞர்களுக்கு மக்கள் ஆதரவு இருந்தும், வஞ்சகரால் வீழ்ச்சிக்கும் வாய்ப்பு உண்டு. விவசாயிகளுக்கு வருமானம் குறைந்தாலும், மன அமைதி கிட்டும்.

அதிர்ஷ்ட திகதிகள் :

ஆக.: 17, 22, 23, 26, 31,
செப்.: 3, 4, 7, 12, 13, 16.

சமபலன் திகதிகள் :

ஆக.: 18, 20, 25, 27, 29.
செப்.: 1, 6, 8, 10, 15.

துரதிர்ஷ்ட திகதிகள் :

ஆக.. 19, 21, 24, 28, 30.
செப். 2, 5, 9, 11, 14.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரிகால கைரேகை சோதிடம்

**— பாக்கி —**

### எண்ணரேகை

(சென்றஇதழில் ஆயுள்ரேகைபற்றிப் பார்த்தோம்)

**எண்ணரேகை:** எண்ணரேகை ஆரம்பமாகும் இடத்தை கவனிக்க வேண்டும். இது மூன்று விதமாக ஆரம்பிக்கலாம். (A) ஆயுள் ரேகைக்கு வெளிப் புறத்திலிருந்து (B) ஆயுள் ரேகையுடன் இணைந்து (C) ஆயுள் ரேகைக்கு உட்புறத்திலிருந்து.

(A) ஆயுள் ரேகைக்கும் எண்ண ரேகைக்கும் இடைவெளி அதிகமில்லாதிருந்தால் நல்லது. இது எண்ணும் திறமை - விரைவான முடிவுக்கு வருதல் - வாழ்க்கை போராட்டங்களை சமாளிக்கும் திறமையை குறிப்பிடும். இது செவ்வாய் மேட்டை நோக்கி இருந்தால் நன்மையாகும். இவர்கள் அரசியல் வாதிகளாகவும், பொது ஜன இயக்கங்களை நடத்தும் திறமையுள்ளவர்களாகவும், பெரிய தொழில் ஆற்றக் கூடிய திறமைகள் உள்ளவர்களாகவும் இருப்பர். ஆனால் சந்திர மேட்டில் முடிந்தால் தொடர்ச்சியற்று காரியங்களைச் செய்பவர்களாகவும், உணர்ச்சி மாறுதல் உடையவர்களாகவும் இருப்பார்கள். எண்ணரேகை குரு மேட்டில் ஆரம்பித்தால் நல்ல அறிகுறி.

எண்ணரேகைக்கும் ஆயுள் ரேகைக்கும் இடையில் வெளி அதிகமாக இருந்தால் அவ்வளவு நன்றல்ல. இவர்கள் எதையும் எண்ணாமல் செய்யத் துணிவார்கள். தோல்வி தான் முடிவு. ஆயுள் ரேகையுடன் சேர்ந்த எண்ண ரேகை உடையவர்கள் தாழ்வு மனப்பான்மை - மிகுந்த ஜாக்கிரதை உள்ளவர்கள். அறிவாளிகளுங் கூட தங்களைக் குறைவாகவே மதிப்பிடுவர்.

எண்ணரேகை வளைந்து கீழ் நோக்கி சந்திர மேட்டுக்கு சென்றுருந்தால் தனிமை - துயரம் — வாழ்க்கையில் வெறுப்பு - விரக்தி உள்ளவர்களாக இருப்பர். மனநோய் கூட பீடிக்கலாம்.

(C) ஆயுள் ரேகைக்கு உட்புறத்திலிருந்து:

கட்டுப்பாடு குறைந்தவர்கள் — சண்டை சச்சரவுகளில் ஈடுபடுவர் — அமைதியற்றிருப்பார்கள் - கோபம் நிறைய அடைவார்கள் - ஆனால் இந்த எண்ண ரேகை செவ்வாய் மேட்டை நோக்கி செல்வதாயிருந்தால் குறைபாடுகளை முயற்சியால் அகற்றி விடுவார்கள். இந்த ரேகை சந்திர மேட்டை நோக்கி வளைந்து சென்று அடைந்திருந்தால் மூளைக் குறைபாடெனக் கொள்ளலாம்.

இரண்டு எண்ண ரேகைகள் (ஒன்று சாதாரணமாக ஆயுள் ரேகையுடன் சேர்ந்தும், மற்றொன்று அதன் மேல் ஆரம்பித்து மேலாகவே ஓடுவதாகவும்) இருந்தால் இரண்டு வித எண்ணம் கொண்டவர்கள்; இரட்டை வேடம் பூண்டு வாழ்க்கை நடத்தக் கூடியவர்கள்.

### எண்ண ரேகையில் குறிகள்

புதன் மேட்டுக்குக் கீழாக எண்ண ரேகையில் வெட்டுக்குறி X விஞ்ஞான சோதனை அல்லது வியாபாரத்தில் ஏற்பட்ட சச்சரவினால் தலைக்கு ஏற்பட்ட காயத்தைக் குறிக்கும்.

சூரிய மேட்டின் கீழ் வெட்டுக்குறி:- திடீரென கீழே விழுதலால் தலைக்கு காயம் வருவதைக் குறிக்கும்.

சனி மேட்டின் கீழ் வெட்டுக்குறி:- மிருகங்கள் சூழ்ச்சி - வெடி விபத்து ஆகியவற்றினால் தலைக்கு வரும் காயத்தைக் குறிக்கும்.

குருமேடு:- மற்றவர்களை அடக்கி ஆள வேண்டும் என்ற அதிகார ஆசையின் காரணமாக எழுந்த சண்டையில் தலைக்கு வரும் காயத்தை காட்டுகிறது. மேற்குறிக்கப்பட்ட மேடுகளுக்கு கீழ் எண்ணரேகையில் சதுரம் குறி இருக்குமானால் அந்த விபத்தினிலிருந்து சமயோசிதமாக அல்லது தெய்வ அருளாலோ காப்பாற்றப்படுவார்கள் என்பதை காட்டுகின்றது.

தீவுகளும், சங்கிலி குறிகள் எண்ணரேகையில் மூளையின் பலவீனத்தைக் குறிப்பிடுவன. அத்துடன் தீவுக்குறி (–0–)

புதன் மேட்டின் கீழ் - காரணமற்ற கவலையும் துயரமும்.

சூரிய மேட்டின் கீழ்:- பார்வை குறைகள்.

சனி மேட்டின் கீழ்:- தலைவலி - தனிமை, பயம்.

குருமேட்டின் கீழ்:- படிப்பில் கவலையீனம் - எதிலும் உற்சாகக் குறைவு.

ஆயுள் மனிதனுக்கு வேண்டியது தான். ஆனால் அதை நல்ல எண்ணரேகையில்லாமல் சிறப்பாக கொண்டு இயக்க முடியாது. முடிந்தளவு ஒவ்வொருவரும் நல்ல கை சாத்திரியிடம் தமது எண்ணரேகை எப்படியென அறிந்து அந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்து வாழ்ந்தால் நிச்சயம் ஜெயம் கிடைக்கும்.

(தொடரும்.........)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மணிப்புரி

காஞ்சிபுரம்

வூலி

G—44

ரேயல் ரிசூ

ஆராதனு

சிவோன் — சாறிகள்

பட்டு வேட்டி சால்வை

றெடிமேட் சேட்

சூட்டிங்

சேட்டிங் ஆகிய சகல...

வெளிநாட்டுப் பிடவைகளுக்கும்,
உள்ளூர் பிடவைகளுக்கும் புகழ்பெற்ற ஸ்தாபனம்


# சிங்கம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்

241, பிரதான வீதி, கொழும்பு – 11. தொலைபேசி: 24153

தலைமையகம் :
நியூ சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்,
58, பெரியகடை.
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 7232

கிளை :
சிங்கம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
172 (84), கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி ; 7713


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உங்களுக்குத் தேவையான சகல அளவு

# கருங்கற்கள்

பெற்றுக்கொள்ள வவுனியாவில் ஒரே ஸ்தாபனம்

## கருணு மெற்றல் இன்டஸ்றீஸ்

யாழ் வீதி, தாண்டிக்குளம், வவுனியா.

தலைமையகம்:

கருணுமூர்த்தி அன் கோ

கந்தசாமி கோவில்றேட், வவுனியா.

தொலைபேசி: 377



Printed and Published by S. C. S. Chithambaranathan
Printed at St. Joseph's Catholic Press, Jaffna



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org